# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## நேரடி பணி நியமன அறிவிக்கை

அறிவிக்கை எண்.ப.தொ.நு.அ.5/2643/2020 நாள் 19.02.2020

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் காலியாக உள்ள ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியில் சேர விரும்பும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் www.tnhb.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக 22.02.2021 முதல் 28.02.2021 வரையில் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது பெயரை பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களும் மேற்படி பணிகளுக்கு இணையதளம் மூலமாக மட்டும் விண்ணப்பிக்க தகுதியுடையவகளாவர்.

**காலிப்பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு.**

| வ. எண் | பதவியின் பெயர் | காலியிட எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் | 05 | 19500–62000 (Level-8) |
| 2. | அலுவலக உதவியாளர் | 10 | 15700–50000 (Level-1) |

**1. முக்கிய நாட்கள்**

| | | |
|---|---|---|
| i) | அறிவிக்கை தேதி | 21.02.2021 |
| ii) | விண்ணப்பங்கள் இணையதள மூலம் பதிவேற்றம் செய்ய தொடங்கும் நாள் | 22.02.2021 காலை 10.00 மணி முதல் |
| iii) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 28.02.2021 இரவு 11.59 மணி வரை |

**2. வயது வரம்பு (31.01.2021 அன்று)**

விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச வயது: 18

அதிகபட்ச வயது வரம்பு விவரம் பின்வருமாறு

| வகை | அதிகபட்ச வயது |
|---|---|
| i)ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர் | 35 வயது (பூர்த்தியாகாமல்) |
| ii) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | 32 வயது (பூர்த்தியாகாமல்) |
| iii) பொதுப் பிரிவினர் | 30 வயது (பூர்த்தியாகாமல்) |

குறிப்பு:

மாற்றுத்திறனாளிகளுக்கு வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் தளர்வு.

**கல்வி தகுதி:**

| | |
|---|---|
| ஓட்டுநர் | (i) ஓட்டுநர் உரிமம் பெற்று வாகனம் இயக்குவதில் மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) கனரக வாகனம் உரிமம் பெற்று அனுபவம் பெற்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>(iii) தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| அலுவலக உதவியாளர் | (i) எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று சைக்கிள் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். |

குறிப்பு:

**31.01.2021** அன்று எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியில்லை.

அரசு விதிமுறைகளின்படி இட ஒதுக்கீடு மற்றும் வயது தளர்வு ஆகியன கணக்கில் கொள்ளப்படும்.

**இட ஒதுக்கீடு விவரங்கள்: ஓட்டுநர்**

| **G.T** | **SC (A) (W) (DW) (PSTM)** | **MBC / DNC** | **B C.** | **G.T. (W) (DW)** | **Total** |
|---|---|---|---|---|---|
| P | P/NP (SC) | P | P | N.P. | 05 |
| 1 | 1 | 1 | 1 | 1 | |

**இட ஒதுக்கீடு விவரங்கள்: அலுவலக உதவியாளர்**

| **G.T** | **SC (A) (W) (DW) (PSTM)** | **MBC / DNC** | **B.C.** | **G.T. (W) (DW)** | **S.C.** | **MBC / DNC (W) (DW)** | **B.C. (W) (DW)** | **G.T.** | **B.C.** | **Total** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | P/NP (SC) | P | P | N.P. | P | NP | NP | NP | N.P. | 10 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | |

(*) G.T. = General Turn
S.C.(A) = Schedule Caste (Arunthathiar)
S.C. = Schedule Caste
MBC&DNC = Most Backward Class & Denotified Communities
B.C. = Backward Class
W = Women
DW = Destitute Widow
PSTM = Persons Studied in Tamil Medium
P = Priority
NP = Non-Priority

<u>வழிமுறைகள்</u>

1. விண்ணப்பதாரர்கள் தமிழ்நாட்டை சார்ந்தவராக இருக்க வேண்டும்.

2. தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி பணி நியமனம் செய்யப்படும் மற்றும் காலியிடங்கள் பகிர்மானம் அடிப்படையில் செய்யப்படும்.

3. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் தவறான விவரங்கள் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. நேர்காணலின் அசல் சான்றிதழ்கள் நேர்காணல் அதிகாரியிடம் காண்பிக்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். நேரிலோ அல்லது தபால் மூலமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

6. விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் வழங்கும் விவரங்களின் அடிப்படையில் மட்டுமே பணி நியமனம் செய்ய பரிசீலனை செய்யப்படும். எனவே இணையதளத்தில் அல்லாது நேரில் காண்பிக்கும் மாறான விவரங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது.